# புதிய மின்சாரப் பேருந்துகள் - முதல்வர் தொடங்கி வைத்தார்...

முதல் பக்கத் தொடர்ச்சி

சமன் செய்யவும் முடியும். மேலும், ஒவ்வொரு டீசல் பேருந்தும் ஒரு கிலோ மீட்டருக்கு சுமார் 755 கிராம் கார்பன் டை ஆக்சைடு (CO) வெளியிடுகிறது. மின்சாரப் பேருந்துகளை பயன்படுத்துவதன் மூலம் கார்பன் உமிழ்வை குறைத்து, காற்றின் தரத்தை கணிசமாக மேம்படுத்தலாம்.

**சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்கும் நோக்கில், தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் முதல் கட்டமாக 207 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்து, பேருந்தினை பார்வையிட்டார். பின்னர் நடத்துனர் மற்றும் ஓட்டுநர்களிடம் கலந்துரையாடினார்.**

**புதிய தாழ்தள மின்சார பேருந்துகளில் உள்ள சிறப்பு அம்சங்கள்**

மின்சார பேருந்தின் படிக்கட்டு உயரம் தரையில் இருந்து 400 மில்லி மீட்டராக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், மின்சாரப் பேருந்துகளில் Kneeling தொழில் நுட்ப வசதி உள்ளதால், மேலும் 250 மி.மீ. பேருந்தின் தரைத் தளத்தை கீழே இறக்கி மாற்றுத்திறனாளிகள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் பேருந்துகளில் எளிதாக ஏறி, இறங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் மின்சாரப் பேருந்துகளில் எளிதாக அமரக்கூடிய வகையில் இருக்கைகள் சமதள உயரத்தில் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், இப்பேருந்துகளில் இருக்கைகளின் பக்கவாட்டு இடைவெளி 650 மி.மீ.க்கு பதிலாக 700 மி.மீ. அகலம் உள்ளதால், நின்று செல்லும் பயணிகளுக்கு எளிதாக இருப்பதோடு, மின்சாரப் பேருந்துகளில், இரண்டு கேமராக்கள் முன் பகுதியிலும், ஒரு கேமரா பின்புறமும் பொருத்தப்பட்டுள்ளதால் மகளிருக்கு பாதுகாப்பான பயணம் உறுதி செய்யப்படுகிறது.

**120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடங்களின் விவரங்கள்**

வழித்தட எண் 2B கவியரசு கண்ணதாசன் நகர் முதல் எம்.கே.பி. நகர் – சத்தியமூர்த்தி நகர் – வள்ளலார் நகர் – யானைகவுனி, சென்னை சென்ட்ரல் – பல்லவன் சாலை – மன்றோ சிலை – போர் நினைவு சின்னம் அண்ணா சதுக்கம் வழியாக கவியரசு கண்ணதாசன் நகர் வரை (சுற்றுப் பேருந்து) 10 பேருந்துகள்;

வழித்தட எண் C33 – கவியரசு கண்ணதாசன் நகர் – கடற்கரை ரயில் நிலையம் – பிராட்வே – நேரு விளையாட்டு அரங்கம் புளியந்தோப்பு – மூலக்கடை – வியாசர்பாடி வழியாக கவியரசு கண்ணதாசன் நகர் வரை (சுற்றுப் பேருந்து) 5 பேருந்துகள்; வழித்தட எண் C64 கவியரசு கண்ணதாசன் நகர் முதல் வியாசர்பாடி – சர்மா நகர் – ஜமாலியா – வள்ளலார் நகர் – எம்.கே.பி நகர் வழியாக கவியரசு கண்ணதாசன் நகர் வரை (சுற்றுப் பேருந்து) 5 பேருந்துகள்;

வழித்தட எண் 18A பிராட்வே முதல் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை 20 பேருந்துகள், வழித்தட எண் 37 வள்ளலார் நகர் முதல் பூவிருந்தவல்லி வரை 10 பேருந்துகள், வழித்தட எண் 46G மகாகவி பாரதியார் (MKB) நகர் முதல் எம்.ஜி.ஆர். கோயம்பேடு பேருந்து நிலையம் வரை 10 பேருந்துகள், வழித்தட எண் 57 வள்ளலார் நகர் முதல் செங்குன்றம் வரை 10 பேருந்துகள், வழித்தட எண் 57X வள்ளலார் நகர் முதல் பெரியபாளையம் வரை 10 பேருந்துகள், வழித்தட எண் 164E பெரம்பூர் முதல் மணலி வரை 10 பேருந்துகள், வழித்தட எண் 170TX மகாகவி பாரதியார் (MKB) நகர் முதல் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை 20 பேருந்துகள், வழித்தட எண் 170C திரு.வி.க. நகர் முதல் கிண்டி திரு.வி.க. எஸ்டேட் வரை 10 பேருந்துகள், என மொத்தம் 120 பேருந்துகள் இயக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஆர். மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம், போக்குவரத்து துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் த.பிரபு சங்கர், அசோக் லேலண்ட் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் ஷேனு அகர்வால், மாநகர் போக்குவரத்து கழக இணை மேலாண் இயக்குனர் செ. நடராஜன், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் அலுவலர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




## குற்றங்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும்:

# கடமை தவறினால் கடும் நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஜூலை 1-**

**குற்றங்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் யாராக இருந்தாலும் கடமை தவறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்டம் ஒழுங்கு ஆய்வு கூட்டம் நிறைவடைந்த பின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**குற்றங்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும்!**

**மீறி நடந்தால் அதில் ஈடுபட்டவர் ரவுடியானாலும், அரசியல் பின்புலம் கொண்டவரானாலும், காவலரே ஆனாலும் அதற்கான தண்டனையை விரைவில் பெற்றுத் தந்து நீதி நிலைநாட்டப்படும் ஆட்சியாகத்தான் திராவிட மாடல் அரசு திகழ்ந்து வருகிறது.**

**"போதைப் பொருள்-கள்ளச்சாராயம் - பெண்கள் பாதுகாப்பு - லாக்கப் மரணங்கள் போன்றவற்றில் யார் கடமை தவறினாலும் அரசின் நடவடிக்கை மிக மிக கடுமையாக இருக்கும்" என்பதைச் சட்டம் - ஒழுங்கு குறித்த இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் வலியுறுத்தினேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## நிலை உயர்த்துதலை மாற்றி

# 21 முதல்நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாக பதவி உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைகளை வழங்கினார்!

சென்னை, ஜூலை 1-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறையில் உறுதியான பணி முன்னேற்றத் திட்டத்தின்படி தற்போதுள்ள 10+5+10 ஆண்டுகள் என்ற காவலர்களுக்கான நிலை உயர்த்துதலை மாற்றி 10+3+10 என்று நிர்ணயம் செய்து, மாநகர காவல் ஆணையரகத்திற்குட்பட்ட 10 முதல் நிலை காவலர்கள் மற்றும் காவல் சரகத்திற்குட்பட்ட மாவட்டங்களிலிருந்து 11 முதல் நிலை காவலர்கள், என மொத்தம் 21 முதல்நிலை காவலர்களுக்கு தலைமை காவலர்களாக பதவிநிலை உயர்வு ஆணைகளை வழங்கினார்.

2025-26 ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானிய கோரிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், காவலர்கள் பதவி உயர்வில் ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டு, உறுதியான பணி முன்னேற்றத் திட்டத்தின் அடிப்படையில் தற்போது நடைமுறையில் உள்ள காவலர்களுக்கான நிலை உயர்த்துதல் (Upgradation) காலத்தை காவல் ஆளிநர்களை முதல்நிலை காவலர் / தலைமை காவலர் / சிறப்பு உதவி ஆய்வாளர் பதவி நிலை உயர்வு மேம்படுத்துவதற்கான கால அவகாசம் 10+5+10 ஆண்டுகள் என்பதை மாற்றி 10+3+10 ஆண்டுகளாக குறைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

அதன்படி, தற்போதுள்ள பதவி நிலை உயர்வுத் திட்டத்தை மாற்றி 10 ஆண்டுகள் பணிபுரிந்த இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகவும், முதல் நிலை காவலர் பதவியிலிருந்து தலைமை காவலர் பதவி உயர்வு பெறுவதற்கான தகுதியுள்ள காலம் 5 ஆண்டு கால வரம்பை 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு, பின்னர் தலைமைக் காவலர்களாக 10 ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர் (மொத்தம் 23 ஆண்டுகள்) தலைமை காவலர் பதவியிலிருந்து சிறப்பு உதவி ஆய்வாளர்களாக பதவி நிலை உயர்வு பெற வழிவகை செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இப்புதிய பதவி நிலை உயர்வுத் திட்டத்தைச் செயல்படுத்த 28.19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேற்படி திருத்திய கொள்கை முடிவானது அரசாணை வெளியிடப்பட்ட 12.06.2025 நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த புதிய பதவி நிலை உயர்வுத் திட்டத்தின்படி 2011ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த 8,533 காவலர்களில், 12.06.2025 அன்று 3 ஆண்டுகள் முதல் நிலை காவலர்களாக பணிநிறைவு செய்து பணியாற்றுபவர்கள் 1.07.2025 முதல் உடனடி பயனடைந்து தலைமை காவலர்களாக பதவி நிலை உயர்வு பெறுவர்.

மேலும், 2026ஆம் ஆண்டில், முதல் நிலை காவலர்களாக பணியாற்றும் 11,488 காவலர்கள் இப்புதிய பதவி நிலை உயர்வின்படி தலைமை காவலர்களாக பதவி நிலை உயர்வு பெற உள்ளனர்.

இந்த புதிய காவலர்களுக்கான நிலை உயர்த்துதல் ஆணையினை செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஒவ்வொரு மாநகர காவல் ஆணையரகத்திற்குட்பட்ட 10 முதல் நிலை காவலர்கள் மற்றும் ஒவ்வொரு காவல் சரகத்திற்குட்பட்ட மாவட்டங்களில் இருந்து 11 முதல் நிலை காவலர்களுக்கும், என மொத்தம் 21 முதல்நிலை காவலர்களுக்கு தலைமை காவலர்களாக பதவிநிலை உயர்வு ஆணை வழங்கி வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர் (நிர்வாகம்) ஜி. வெங்கட்ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தலைமைச்செயலகத்தில், நேற்று இயற்கை வளங்கள் துறை அமைச்சர் .எஸ்.ரகுபதி புவியியல் மற்றும் சுரங்கத் துறைக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதியதாக தேர்வு செய்யப்பட்ட 4 உதவி புவியியலாளர்கள் பணியிடத்திற்கான நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வின் போது இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் க.பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ.சரவண வேல்ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.




## டி.எஸ்.ஏ.சிவப்பிரகாசம் தலைமை! பத்தமடை கே.பரமசிவம் முன்னிலை!

# கவிஞர் நெல்லை குமார. சுப்பிரமணியம் நினைவேந்தல் - திருவுருவப்படம் !

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி திறந்துவைத்து, நூலை வெளியிடுகிறார்!

நெல்லை, ஜூலை 1 -

மின் கழக தொ.மு.ச. மாநில மேனாள் இணைப் பொதுச் செயலாளர், பாளை பகுதிக் கழக அவைத் தலைவர், மறைந்த கவிஞர் நெல்லை குமார.சுப்பிரமணியம் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி - படத்திறப்பு - நூல் வெளியீட்டு நிகழ்ச்சி 12.7.2025 சனிக்கிழமை காலை 9 மணியளவில் வண்ணார் பேட்டை சகுந்தலா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



இந்நிகழ்ச்சிக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.எஸ்.ஏ. சிவப்பிரகாசம் தலைமை வகிக்கிறார்.

பத்தமடை கே.பரமசிவம் முன்னிலை வகிக்கிறார். சு.புன்னைச் செழியன் வரவேற்கிறார்.

அன்னாரது படத்தை திறந்து வைத்து, நூலினை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

முதல் நூலினை திருச்சி பா.பன்னீர் செல்வம் பெற்றுக் கொள்கிறார்.

இந்நிகழ்வில் கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா நினைவேந்தல் சிறப்புரையாற்றுகிறார். இதில் கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப், டி.பி.எம். மைதீன்கான். ந.மாலைராஜா, ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், விஜிலா, சத்தியானந்த், சு.சுப்பிரமணியன், ஏ.எல்.பி.தினேசு, ஆ.துரை, பா.மணி மாறன், கே.சசிகுமார், உரத்தநாடு குணசேகரன். இரா.வேல்முருகன், நீரை மகேந்திரன், இரா.காசி, குமணராசன், ச.இராஜேந்திரன், ச.நடராசன், முனைவர் வா.நேரு, ம.பூ.இராஜவர்மன், வண்ணை சேகர், ஆவடி அ.அமுதவாணன் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றுகின்றனர்.

முனைவர் கடலூர் மணிமாறன் ஏற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை பாப்பாக்குடி இரா.செல்வமணி தொகுத்து வழங்குகிறார்.

சு.திருமாவளவன் நன்றி கூறுகிறார்.


## மக்களின் விருப்பங்களின் அடிப்படையில்!

# மொழிக் கொள்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

## 'தி இந்து' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 1 -

நாடு முழுவதும் உள்ள மக்கள் விருப்பங்களின் அடிப்படையில், ஒன்றிய பாஜக அரசு மொழிக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், அத்துடன் ஒற்றுமையின் மொழியையும் அது கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் "தி இந்து" தலையங்கம் அறிவுறுத்தி உள்ளது.



THE HINDU

Language of unity

Uniformity should not be confused with national unity in language policy

The National Education Policy (NEP) 2020 mandates that all students across the country must learn three languages in school. Theoretically, NEP 2020 is more flexible than the previous versions of the three-language policy in India, which have always faced resistance not just in south India but also different States. Hindi is only one of the many Indian languages, and States are free to choose any two Indian languages and one foreign language in the mix of three, according to NEP 2020. However, the fear that Hindi will become the default option as the second Indian language apart from the native language is aggravated by Maharashtra government's attempts to prioritise Hindi over oth-

இதுகுறித்து "தி இந்து" ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள தலையங்கத்தில், நாடு முழுவதும் பள்ளி மாணவர்கள் மூன்று மொழிகளைக் கற்க வேண்டும் என தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்துவதையும், கொள்கை அளவில், தென்னிந்தியா மட்டுமின்றி, பல்வேறு மாநிலங்களிலும் இதற்கு எதிர்ப்பு எழுந்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவில் உள்ள பல மொழிகளில் ஒன்றுதான் இந்தி என்று "தி இந்து" ஆங்கில நாளேடு குறிப்பிட்டுள்ளது.

இரண்டு இந்திய மொழிகளையும் ஒரு வெளிநாட்டு மொழியையும் மாநிலங்கள் தேர்வு செய்யலாம் என தேசிய கல்விக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில்,

தாய்மொழியைத் தவிர இரண்டாவது இந்திய மொழியாக இந்தி திணிக்கப்படும் என்ற அச்சம், மகாராஷ்டிரா அரசின் நடவடிக்கையால் அதிகரித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விவகாரம் ஒரு அரசியல் புயலை கிளப்பியதாலும், ஆளும் பா.ஜ.க.வுக்கு ஏற்பட்ட பின்னடைவாலும், 5ம் வகுப்பு வரை இரண்டாவது மொழியாக இந்தி கற்பிக்கப்படும் என்ற முடிவை மகாராஷ்டிர அரசு தற்போது திரும்பப் பெற்றுள்ளது.

இந்தித் திணிப்புக்கு எதிராக உத்தவ் தாக்கரேவும், ராஜ் தாக்கரேவும் இணைந்து போராட்டம் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளதை சுட்டிக்காட்டி உள்ள இத்தலையங்கம், இதன் காரணமாகவே மும்மொழிக் கொள்கை குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாநில முதல்வர் ஃபட்னாவிஸ் அறிவித்துள்ளதை "தி இந்து" ஆங்கில நாளேடு குறிப்பிட்டுள்ளது. அரசியல் அதிகாரத்தைக் கொண்டு, மொழிகளை திணிக்கும் முயற்சிகள் மக்களை பிளவுபடுத்தும் செயல் என விமர்சித்துள்ள அந்த நாளேடு, பா.ஜ.க., மும்மொழிக் கொள்கையை தேசிய ஒற்றுமைக்கான பிரச்சினையாகப் பார்க்கும் நிலையில், இந்தி பேசும் மாநிலங்களில் உள்ள பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலம் கற்க விரும்புகிறார்கள் என்று தெரிவித்துள்ளது. இந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்றை 3வது மொழியாக தேர்வு செய்யலாம் என ஒன்றிய அரசு கூறுவதை ஏற்க முடியாது, பீகார், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் தமிழையோ, மலையாளத்தையோ கற்பிக்க வாய்ப்பில்லை என்பதையும் இத்தலையங்கம் தெளிவுபடுத்தி உள்ளது.

மும்மொழிக் கொள்கையால், பெரும்பான்மையான மாணவர்கள் மீது இந்தி திணிக்கப்படும் வாய்ப்பு அதிகம் என்றும், அனைத்து இந்திய மொழிகளையும் கற்பிக்கும் வாய்ப்பை எந்த மாநிலமும் வழங்க முடியாது என்றும் தெரிவித்துள்ள "தி இந்து" தலையங்கம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களின் விருப்பங்களின் அடிப்படையில், பா.ஜ.க. தனது மொழிக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அது ஒற்றுமையின் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளது.